**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 10–ம் நாள் புதன்கிழமை**

**CMP.No.216/2025**

**(CNR.No. TNNM-14-000711-2025)**

பழனிவேல்(58)
த/பெ. இராமசாமி .... மனுதாரர்

// எதிர் //

1. கஞ்சமலை மணியகாரர்(60),
த/பெ. துரைசாமி,
2. மாதேஸ்வரன் மணியகாரர்(50),
த/பெ. குப்புசாமி,
3. சுப்ரமணி மணியகாரர்(60),
த/பெ. மொட்டையன்
4. ஜெயராமன் மணியகாரர்(65),
த/பெ. பழனியாண்டி
5. மனோகரன்(45),
த/பெ. கருப்பண்ணன்
6. காவல் உதவி ஆய்வாளர் அவர்கள்,
எருமப்பட்டி காவல் நிலையம் ... எதிரிகள்

மனுதாரர் தாக்கல் செய்துள்ள BNSS பிரிவு 175(3) –ன் கீழான இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரரே ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் குற்றவியல் அரசு வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், அவர் தரப்பில் எடுத்துரைத்த வாதங்களையும் சமர்ப்பித்த ஆவணங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

## உத்தரவு

மனுதாரர் இம்மனுவினை 1 முதல் 6 எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடவேண்டி தாக்கல்செய்துள்ளார்.

2.1) மனுதாரர் தனது மனுவில், மனுதாரர் மேற்கண்ட முகவரியில் வசித்து வருவதாகவும், எதிரிகள் 1 முதல் 5 பேர் எருமப்பட்டி காவல் நிலையத்திற்குட்பட்ட அலங்காநத்தம் கிராமத்தில் வசித்து வருவதாகவும், மனுதாரரின் குத்தகை விவசாய நிலம் அருகே அரசு அனுமதி இல்லாமல் சந்து மதுக்கடை செயல்பட்டு வந்ததாகவும், பாலப்பட்டி சுபாஷ் என்பவரிடம் சந்து மதுக்கடை செயல்பட்டு வந்ததாகவும், பாலப்பட்டி சுபாஷ் என்பவரிடம் சந்து மதுக்கடை இங்கு செயல்படக்கூடாது என்று மனுதாரர் கூறியதை ஏற்காமல், போலீஸ் அனுமதியுடனும், ஊர் மணியக்காரரிடம் மாதம் ரூ. 10,000/- கொடுத்துவிட்டுத்தான் விற்பனை செய்கின்றோம் என்று கூறி தன்னை தகாத வார்த்தைகளால் பேசியது மட்டுமல்லாமல் அடிப்பதற்கும் முன்வந்துள்ளதாகவும், கொலை மிரட்டலும் விடுத்துள்ளதாகவும், அப்போது எதிரிகள் மனுதாரர் மீதும், ஓய்வு பெற்ற ஆசிரியர் உலகநாதன் மீதும், இவர்கள் ஊருக்குள் கலவரத்தை உருவாக்குகிறார்கள் என்று கூறி எருமப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும், அப்போது ஊர் பொது மக்கள் சார்பாக கிராமசபை கூட்டத்தில் பஞ்சாயத்து தலைவரிடம் புகார் மனு கொடுத்ததின் பேரில் மதுக்கடை நடத்தக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் மனுதாரரை அவமானப்படுத்தும் உட்கருத்துடன் வன்முறையை பயன்படுத்தியதாகவும் கூறியுள்ளார்.

2.2) மனுதாரர் மேற்கண்ட சம்பவம் குறித்து நாமக்கல் மாவட்ட முதன்மை நீதிபதி, தமிழக முதல்வர், நாமக்கல் மாவட்ட ஆட்சியர், நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் எருமப்பட்டி உதவி காவல் ஆய்வாளர் ஆகியோருக்கு பதிவு அஞ்சல் மூலம் புகார் மனு அனுப்பப்பட்டதாகவும், பின்னிட்டு அதை பெற்றுக்கொண்ட நாமக்கல் மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள் நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு 08.02.2023 அன்று மேற்கண்ட புகாரை அனுப்பி பரிந்துரை செய்துள்ளதாகவும், அந்த புகார் மீது காவல் துறையினர் இன்று வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிரிகள் தங்களை ஊர் மணியக்காரர் என்று சொல்லிக் கொண்டு சாதிக்கலவரத்தை ஏற்படுத்தி வரும் வகையில் விளம்பர பலகை வைப்பது, பொது கோவில்களில் சாதிச்சின்னம் வைப்பது, அதை கேட்டால் அடியாட்களை வைத்து அடிப்பது, அரசு மருத்துவமனை அருகில் அரசு அனுமதி இல்லாத மதுக்கடை நடத்துவது என எதிரிகள் அராஜகம் செய்து வந்ததாகவும், மேலும் 21.04.2023 யில் மதுக்கடை அருகில் உள்ள கிணற்றில் மதுபோதையில் ராஜீ என்பவர் விழுந்து இறந்துவிட்டதாகவும், அதை எருமப்பட்டி காவல் துறையினர் எதிரிகளுக்கு சாதகமாக செயல்பட்டு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

2.3) மனுதாரர் நிலத்தின் அருகில் மயானம் உள்ளதாகவும், அதில் ஆலரம் இருந்ததாகவும், அந்த ஆலமரத்தால் தனது விவசாய நிலம் பாதிப்பிற்குள்ளானதால் வருவாய் துறையினரிடம் அனுமதி பெற்று பஞ்சாயத்து தலைவர் மூலம் அந்த ஆலமரத்தை வெட்டி விட்டதாகவும்,

மனுதாரர் இந்த ஆலமரத்தை வெட்டுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு சுமார் 5 ஆண்டுகள் முன்பாக பண்ணபாக்கி கிருஷ்ணன் மகன் ராமசாமி என்பவரிடம் ஆலமரத்தின் கிளைகளை வெட்டி எடுத்துக்கொள்ள எதிரிகள் அனைவரும் ரூ. 70,000/- பெற்றுள்ளதாகவும், அதே போல் தன்னிடம் மரம் வெட்டியதற்கு அபராதம் வாங்க வேண்டும் என்று 1,2 மற்றும் 3ம் எதிரிகள் அவர்களை கேட்காமல் மரத்தை வெட்டியது தவறு என்றும், மயானமானது அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் கூறி தன்னை மிரட்டி வருவதாகவும் கூறியுள்ளார்.

2.4) எதிரிகள் அனைவரும் மனுதாரர் மீது வீண் பழி சுமத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டும், மனுதாரரிடம் பணம் வசூல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடனும், வருவாய் கோட்டாட்சியரின் அனுமதியை மதிக்காமலும் மனுதாரரை ஊரைவிட்டு ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும் கூறி வருவதாகவும், மேலும் 14.09.2023 அன்று காலை 07.00 மணிக்கு பொதுமக்கள் அனைவரும் பகவதியம்மன் கோவிலுக்கு வரவேண்டும் என்றும், ஆலமரத்தை வெட்டியதால் மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், 5 இலக்கமிட்ட எதிரி டாம் டாம் போட்டதாகவும், அதனால் மனுதாரருக்கு மிகுந்த மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும், மேலும் இதனால் தனது உள்ளூரில் பெருத்த அவமானம் ஏற்பட்டுள்ளதாகவும், மேலும இதனால் தனது உள்ளூரில் பெருத்த அவமானம் ஏற்பட்டுள்ளதாகவும், எதிரிகள் எதிர்பார்த்தது போல் பொது மக்கள் யாரும் வராததால் தனது மீது எருமப்பட்டி காவல் நிலையத்தில் 1 முதல் 4 இலக்கமிட்ட எதிரிகள் புகார் கொடுத்ததையடுத்து

எருமப்பட்டி காவல் ஆய்வாளர் 15.09.2023 அன்று மனுதாரரை விசாரித்ததாகவும், அப்போது மனுதாரர் வருவாய் துறையினரின் அனுமதிக் கடிதத்தை கொடுத்ததுடன் னுதாரரை மிரட்டிய 1 முதல் 3 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கொடுத்த புகாரை காவல் ஆய்வாளர் வாங்க மறுத்ததால், மனுதாரர் மேற்படி புகாரை பதிவு அஞ்சல் மூலம் முதல்வர், ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர், உதவி ஆய்வாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்ததாகவும், அதன்பிறகு முதல்வர் மனு மீது விசாரணை செய்வதாகக் கூறி 23.09.2023 அன்று எருமப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் மனுதாரரை அழைத்ததையடுத்து மனுதாரர் மூன்று சாட்சிகளுடன் காவல் நிலையம் சென்றதாகவும், ஆனால் காவல் ஆய்வாளர் மனுதாரர் சொன்னதை ஏற்றுக்கொள்ளாமல், சாட்சிகளை இவர்கள் பெட்டிஷன் பார்ட்டிகள் என்று கூறி அவர்களை விசாரணை செய்ய மறுத்துவிட்டதாகவும், மேல் விசாரணைக்கு வரும்படி மனுதாரரிடம் கையெழுத்து வாங்கிவிட்டு எந்த விசாரணையும் நடத்தவில்லை என்றும் கூறியுள்ளார்.

2.5) எதிர்மனுதாரர்கள் ஊர்ப் பொதுமக்களிடம் வரிவசூல் செய்து திருவிழா நடத்திவிட்டு வரவு செலவு கணக்கு காட்டாமல் மீதம் உள்ள பணத்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் எதிர்மனுதாரர்கள் பெயரில் டெபாசிட் செய்துள்ளதாகவும், அதில் சுமார் 1 லட்சம் எடுத்து மனுதாரரின் மனுவை விசாரணை செய்யாமலும் அதன் மீது நடவடிக்கை எடுக்காமலும் இருக்கும் பொருட்டு செலவு செய்து வருவதாகவும், மேலும் எதிரிகள் பொது கோவிலுக்குச் சொந்தமான சுமார் 5

ஏக்கர் நிலத்தில் இருந்த இயற்கையாக வளர்ந்த பலவகை மரக்கன்றுகளை JCB மூலமாக பிடுங்கி விட்டதாகவும், இதற்காக எதிரிகள் அரசு அனுமதி பெறவில்லை என்றும், 17.11.2023 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கொடுத்த மனு மீது மேல்முறையீட்டு அலவலர் விசாரணை செய்து தகவல் அறிக்கையில் புதிய புகார் மனு கொடுத்து பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கியுள்ளதாகவும், அதனால் மனுதாரர் 06.01.2024 அன்று மாண்பமை மாவட்ட முதன்மை நீதிபதி முன் விசாரணை மேற்கொள்ள மனு கொடுத்திருந்ததாகவும், 2024ம் ஆண்டு மே மாதம் ஊர் பண்டிகை நடந்த போது 1,2,3 எதிரிகளின் போதனை மூலம் 4ம் எதிரி குற்றமுறையீட்டாளரிடமிருந்து வரி வாங்க மறுத்துவிட்டு பண்டிகை நடத்தி தன்னை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளதாகவும், 1 முதல் 5 எதிரிகளின் சட்டத்திற்குப் புறம்பான இத்தகைய செயல்களுக்கு 6ம் எதிரியும் துணைனின்று செயல்பட்டு வருவதாகவும், மனுதாரர் இப்புகார் மனுவை ஏற்று 6ம் எதிரியிடம் மனுதாரர் கொடுத்த புகார் மீது 1 முதல் 5 எதிாகள் மீது பிரிவுகள் 133, 255, 300, 318, 352 BNS சட்டப்படி முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்ப 6ம் எதிரிக்கு உத்தரவிடமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.1) இம்மனு தொடர்பாக எதிரிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு எதிரிகள் தரப்பில் பதிலுரை தாக்கல்செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிலுரையில், மனுதாரர் பழனிவேல் என்பவர் நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் வட்டம் பாலப்பட்டி அக்ரஹாரம் கிராமம் புல எண் 96/1 ல் 0.68.0 ஏர்ஸ் நிலத்தில் விவசாயம் செய்து வருவதாகவும், மேற்படி

நிலத்தின் மேற்கு பகுதியில் உள்ள புல எண் 97/2 ல் மயானம் உள்ளது எனவும் மயானத்தில் பெரிய ஆலமரம் உள்ளதாகவும், அந்த ஆலமரத்தின் கிளை வாது மனுதாரர் பழனிவேல் என்பவரின் தோட்டத்தில் விவசாயத்திற்கு இடையூறாக இருந்ததாகவும் அதன் கிளை வாது வெட்டுவதற்கு ஆட்சியரிடம் மனு எண் 5482443 நாள்: 21.06.2023 அன்று மனு அளித்து அந்த மனு மீது வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் ஆய்வு செய்ததாகவும், பின் வட்டாட்சியர் அவர்கள் மனுதாரருக்கு மற்றும் ப.அலங்காநத்தம் பஞ்சாயத்து தலைவருக்கும் ஒரு அறிக்கை 23.06.2023 அன்று அனுப்பி உள்ளதாகவும் மேலும் ஆலமரத்தின் கிழக்கு பக்க கிளை வாதுகளை 12.09.2023 அன்று மனுதாரர் ஆள் வைத்து வெட்டியதாகவும் அதற்கு எதிர்மனுதாரரான 1) துரைசாமி மகன் கஞ்சமலை 2) குப்புசாமி மகன் மாதேஸ்வரன் 3) மொட்டையன் மகன் சுப்ரமணி ஆகியோர் மனுதாரர் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியில் அபராதம் விதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஊரை விட்டு ஒதுக்கி வைப்பதாக கருப்பன் மகன் மனோகரன் ஊரில் டாம் டாம்(தண்டோரா) போட்டதாகவும், மேலும் சாதிக்கலவரம் கட்டப்பஞ்சாயத்து சந்து மதுக்கடை பண வசூல் செய்வது பணத்தை கையாடல் செய்து கொண்டு பொதுமக்களை மிரட்டுவது போன்ற வேலைகள் செய்து வருவதாகவும், தங்கள் நீதிமன்றத்தில் மனுதாரர் கொடுத்த மனுவினை விசாரணை செய்து அறிக்கை அனுப்பும் படி காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்த மனுவினை பெற்று காவல் ஆய்வாளர் ஆகிய தான் மனுதாரரின் ஊரான அலங்காநத்தம் சென்று மனுதாரரையும் மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள நபர்கள் மற்றும் ஊர்ப் பொதுமக்கள்

அனைவரையும் நேரில் அழைத்து விசாரணை செய்யப்பட்டதாகவும், விசாரணையில் கருப்பன் மகன் மனோகரன் என்பவர் மட்டும் ஊரில் மரம் வெட்டப்பட்டது தொடர்பாக (தண்டோரோ) போடப்பட்டது உண்மைதான் எனவும், மற்றபடி கூட்டம் நடந்ததா என்றும் என்ன நடந்தது என்றும் தெரியவில்லை என்று கூறியதாகவும், மேலும் மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள எதிர்மனுதாரர்களும் ஊர்ப்பொதுமக்களும் மனுதாரரிடம் அபராதம் போடவில்லை எனவும் ஊரைவிட்டு ஒதுக்கவும் இல்லை எனவும் விசாரணையில் தெரியவருவதாகவும், மேலும் புகார்தாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள பல தரப்பட்ட சம்பவங்களுக்கு தன்னற்ற சாட்சியோ ஆவணங்களோ விசாரணையின் போது வழங்கப்படவில்லை, எனவே பிடிக்கக்கூடிய குற்றம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் மேற்படி மனு மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

**3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

4.1) இவ்வழக்காவணங்களை கவனமாக ஆராயும் போது மனுதாரர் இம்மனுவினை BNSS பிரிவு 175(3) ன் கீழ் தாக்கல் செய்துள்ளார். BNSS பிரிவு 175(3) ன் கீழ் காவல் துறையினரை வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு உத்தரவிட மனுதாரர் உரிய காவல் நிலையத்தில் புகார் அளித்த பின்னர் மேற்படி புகாரின் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாத போது சம்மந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அந்த புகாரினை எழுத்து மூலமாக அஞ்சல் வழியாக அனுப்புதல் வேண்டும். மேற்படி காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பப்பட்ட பின்பும் அந்த புகாரின் பேரில்

நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில் மட்டுமே BNSS பிரிவு 175(3) ன் கீழ் மனுதாக்கல் செய்ய இயலும். மேற்படி நிபந்தனைகளை முறையாக பின்பற்றியது குறித்து மனுதாரர் BNSS பிரிவு 175(3) ன் கீழ் ஒரு பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

4.2) இவ்வழக்காவணங்களை கவனமாக ஆராயும் போது மனுதாரர் மேற்சொன்னவாறு பிரமாண பத்திரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர் தனது மனுவில் கடந்த 15.09.2023ம் தேதி எருமப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி புகாரின் பேரில் எருமப்பட்டி காவல் நிலையத்தார் நடவடிக்கை எடுக்காத நிலையில் மனுதாரர் BNSS பிரிவு 173(4) ன் கீழ் உரிய காவல் கண்காணிப்பாளருக்கு மேற்படி புகாரினை அஞ்சல் வழியாக அனுப்பியிருக்க வேண்டும். ஆனால், இவ்வழக்காவணங்களை கவனமாக ஆராயும் போது மனுதாரர் மேற்படி புகாரினை காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பியதாக மனுவில் குறிப்பிட்டுள்ள போதிலும் மேற்படி புகாரின் நகலையோ அல்லது மேற்படி புகாரினை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தனது மனுவில் எந்த தேதியில் தான் நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகாரினை கொடுத்தார் என்பது குறித்து குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை. எனவே, மனுதாரர் தனது புகாரினை உரிய காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பினார் என முடிவு செய்ய இயலாது.

4.3) இவ்வழக்கில் மனுதாரர் தனது மனுவில் தனது குத்தகை நிலத்திற்கு அருகே சந்து மதுக்கடை இருந்ததாகவும், அதனை அகற்ற சொல்லி சொன்ன போது எதிரிகள் அவர் மீது எருமப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், பின்பு எதிரிகள் தங்களை ஊர் மணியக்காரர்கள் என சொல்லிக்கொண்டு சாதி கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் விளம்பர பலகை வைப்பது, பொது கோவில்களில் சாதி சின்னம் வைப்பது என ஆராஜகம் செய்து வருவதாகவும், பின்பு எதிரிகள் பொது கோயிலுக்கு சொந்தமான சுமார் 5 ஏக்கர் நிலத்திலிருந்த மரக்கன்றுகளை ஜேசிபி மூலம் பிடுங்கி விட்டதாகவும் கூறியுள்ள நிலையில் மனுதாரர் கடந்த 15.09.2023ம் தேதி எருமப்பட்டி காவல்நிலையித்தில் கொடுத்த புகாரில் மேற்சொன்ன குற்றச்சாட்டுகள் எதையும் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மேற்சொன்ன குற்றச்சாட்டுகள் குறித்து மனுதாரருக்கு இம்மனுவினை தாக்கல் செய்ய வழக்கு மூலம் ஏற்பட்டதாக முடிவு செய்ய இயலாது.

4.4) இவ்வழக்கில் மனுதாரர் தனது நிலத்தின் அருகில் இருக்கும் மயானத்தில் உள்ள ஆலமரத்தால் தனது விவசாய நிலத்தில் பாதிப்பு ஏற்படுவதாகவும், அதனால் வருவாய் துறையினரிடம் அனுமதி பெற்று பஞ்சாயத்து தலைவர் மூலம் அந்த ஆலமரத்தை வெட்டி விட்டதாகவும், தான் ஆலமரத்தை வெட்டுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு சுமார் 5 ஆண்டுகள் முன்பே பண்ணபாக்கி கிருஷ்ணன் மகன் ராமசாமி என்பவரிடம் ஆலரத்தின் கிளைகளை வெட்டி எடுத்துக்கொள்ள எதிரிகள் அனைவரும் ரூ.70,000/- பெற்றுள்ளதாகவும், அதனால் தன்னிடம் மரம் வெட்டியதற்கு அபராதம் வாங்க வேண்டும் எனவும், தான் 1 முதல் 3

எதிரிகள் கேட்காமல் மரத்தை வெட்டியதை தவறு எனவும், மயானமானது எதிரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது எனவும், எதிரிகள் அனைவரும் தன் மீது வீண் பலி சுமத்த வேண்டும் என்று தன்னிடம் பணம் வசூல் செய்ய வேண்டும் என்றும், வருவாய் கோட்டாச்சியரின் அனுமதியை மதிக்காமல் தன்னை ஊரை விட்டு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கூறி வருவதாகவும், கடந்த 14.09.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு பொதுமக்கள் அனைவரும் பகவதியம்மன் கோவிலுக்கு வரவேண்டும் என்றும் ஆலமரத்தை வெட்டியதால் தன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் 5ம் எதிரி டாம் டாம் போட்டதாகவும், அதனால் தனக்கு உள்ளூரில் பெருத்த அவமானம் ஏற்பட்டதாகவும், தனக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்ப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

4.5) இவ்வழக்கில் மனுதாரர் கடந்த 15.09.2023ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரை கவனமாக ஆராயும் போது 1 முதல் 3 மற்றும் 5ம் எதிரிகள் ஆகியோரை குறிப்பிட்டு கூறி புகார் அளித்துள்ள நிலையில் மனுதாரர் தனது மனுவை 1 முதல் 5 எதிரிகளை குறிப்பிட்டு குற்றம் சாட்டியுள்ளது மனுதாரர் பொருண்மைகளை மிகைப்படுத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தனது மனுவில் தனக்கு எவ்வகையில் அவமானம் ஏற்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு குற்றச்சாட்டுகள் எதுவும் முன்வைக்கவில்லை.

4.6) இவ்வழக்கில் மனுதாரர் BNSS பிரிவு 173(4) ன் கீழான நிபந்தனைகளை முறையாக பின்பற்றாததாலும் மனுதாரர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சங்கதிகளை இம்மனுவில் மிகைப்படுத்தி

கூறியுள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10–ஆம் நாள் புதன்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.10 11:09:28 +0530

நீதித்துறை நடுவர்,
சேந்தமங்கலம்.